விலை ரூபா 1-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 30 மாசி 7 ஐ. ஆகிர் பிறை 30 இதழ் 9

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 19 2 1988

## நெடுந்தீவில் வாந்திபேதி! கட்டுப்படுத்த நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் தீவிரமாகப் பரவிவரும் வாந்திபேதி நோயினைக்கட்டுப்படுத்த வட பிராந்திய சுகாதார சேவைப் பகுதியினர் சுகாதாரக் குழுக்களை அமைத்து தீவிர சேவையாற்றி வருகின்றனர்.

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்தின்கீழ் இச்சேவை நெடுந்தீவில் பரவலாக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை வைத்திய அதிகாரி டாக்டர் கந்தசாமி ஐந்து நாட்களுக்குமேல் அங்கு தங்கியிருந்து நடைமுறைகளை மேற்பார்வை செய்து வருகிறார். கோப்பாய் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் நவரட்ணராஜாவும் நெடுந்தீவுப்பகுதிக்குச் சேவைக்காகத் தற்பொழுது அனுப்பி வைக்

[8ம் பக்கம் பார்க்க]

## யாழ். செயலகத்தின் சில பகுதிகள் இயங்கின

[சுண்டுக்குளி]

யாழ் செயலகம் மூன்று வாரஇடைவெளியின் பின்னர் நேற்றுமீண்டும் செயல்பட்டது

யாழ்.அரசாங்க அதிபரும் மற்றும் சில உயர் அதிகாரிகளும் பணிக்குவந்திருந்தனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## 1983 ஜூலைக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட

# வடக்கு, கிழக்கு நிறுவனங்கள்:

# சலுகைகடன்வசதி

(கொழும்பு)

**1983-ம் ஆண்டு ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து பாதிப்புக்குள்ளான வடக்கு, கிழக்கு பகுதிகளின் கைத்தொழில், வர்த்தக நிறுவனங்களுக்கு சலுகைக்கடன்வசதி அறிவிக்கப்பட்டுள்ளது.**

**நிதி திட்டமிடல் அமைச்சர் ஜறைப் நெய்நைமரிக்கார் இச் சலுகைக்கடன் வசதி குறித்து அமைச்சரவையில் தெரிவித்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.**

"ஜூலை கலவரத்தின் பின் பலத்த சேதத்திற்குள்ளாகின. இலங்கை வங்கி, மற்றும் அங்னர் வடக்கு, கிழக்கு மாகா இவற்றைத் திருத்துவதற்கான கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்ணங்களில் பல கைத்தொழில், சலுகைக்கடன்வசதி 'ரேபியா' களால் வழங்கப்படும்" என்று வர்த்தகக் கட்டிடங்கள் உதவி நிறுவனம் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## யாழ். மாவட்டத்தில் பத்து தபாலகங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பத்து தபாற்கந்தோர்களைப் புனர் நிர்மாணம் செய்யத் தபாற் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

கலவரங்களாற் பாதிக்கப்பட்டுள்ள அத்தபாலகங்களின் சேத விபரம்பற்றிய மதிப்பீட்டைத் தயாரிக்கும்படி யாழ். பிராந்திய தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் கேட்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி, கொக்குவில், விசாவிளான், தெல்லிப்பழை, சுண்டிக்குளி, பண்டத்தரிப்பு, உரும்பராய், சுழிபுரம், கைதடி, மானிப்பாய் ஆகிய பத்து இடங்களையும் சேர்ந்த தபாற் கந்தோர்களே சேதமடைந்தவையாகும்.

இத்தபாலகங்களில் சில தற்போது தற்காலிக கட்டிடங்களில் இயங்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## லொறி கடத்தப்பட்டது!

(பண்டத்தரிப்பு)

கொழும்பிலிருந்து பண்டத்தரிப்புக்கு உணவுப்பொருள்களை ஏற்றி வந்த லொறி வவனியாவுக்கு அண்மையிலுள்ள இறப்பைக்குளம் எனுமிடத்தில் துப்பாக்கி முனையில் வழிமறிக்கப்பட்டு காட்டுக்குள் கடத்திச் செல்லப்பட்டு அதிலிருந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

மாதகலைச் சேர்ந்த குணம் என்பவருக்கு சொந்தமான இந்த லொறியை வழிமறித்த மேற்படி கோஸ்ட்டியினர் துப்பாக்கிகளைக் காட்டி லொறிச் சாரதியையும் கிளினரையும்

[8-ம் பக்கம் பார்க்க]

## 'விஜே' கொலையாளிகள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் கண்டுபிடிக்கப்பட்டது

(கொழும்பு)

திரு. விஜயகுமாரரணங்காவைச் சுட்டுக் கொன்றவர்கள் பாவித்ததாகக் கூறப்படும் சிவப்புநிற மோட்டார்சைக்கிள் ஒன்றுபலகவிடப்பட்டநிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மோட்டார்சைக்கிள் நுகேகொடையில் வீதியோரத்தில் கிடக்ககாணப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை திரு. குமாரரணதுங்காவைக் கொலைசெய்தவர்கள் தொடர்பானதகவல்களைத் தருவோருக்கு ஐந்துலட்சம் ரூபா சன்மானமாக வழங்கப்படும்என்றுபொலிஸ்திணைக்களம் அறிவித்துள்ளது.

## ஹோமகம இடைத் தேர்தல் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல்

(கொழும்பு)

ஹோமகம தொகுதிஇடைத் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப்பத்திரங்கள் கொழும்பு கச்சேரியில் நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டன.

ஆறுவேட்பாளர்கள் தமது நியமனப்பத்திரங்களை நேற்றுத் தாக்கல் செய்தனர்.

ஐ.தே.க.சார்பில் சிசில்குமாரமுனசிங்காவும், ஸ்ரீ.ல.சு.க. சார்பில் ஸ்டான்லி திலகரத்னவும் தமதுநியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். ஏனையோர் சுயேச்சை வேட்பாளர்களாவர்.

## சிறையில் தடுப்புக் காவலிலுள்ளவர்களை விடுதலை செய்யக் கோரி மகஸீன் சிறையில் உண்ணுவிரதம்

[கொழும்பு]

கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் கைதிகளையும் விடுதலைசெய்யுமாறுகோரி தடுப்புக்காவலிள்ளவர்கள் நேற்றுமுன்தினம் ஒருநாள் அடையாள உண்ணுவிரதத்தைமேற்கொண்டனர்.

மேற்படி கோரிக்கைக்கு சாதகமான பதில் ஒருவாரத்தில் கிடைக்காத பட்சத்தில் சுழற்சிமுறையில் உண்ணுவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாகவும் இதன் இறுதிக்கட்டமாக சாகும்வரை உண்ணுவிரதத்தில் குதிக்கப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக இந்தியப் பிரதமருக்கு இலங்கை ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித்தலைவருக்கும் மற்றும் பல அரசியல் பிரமுகர்களுக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் குறிப்பிடுகையில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் 2, 11 ஷரத்தின்படி அனைவரும் விடுதலைசெய்யப்படவேண்டியவர்களாக இருந்தும் கைதிகளில் ஒருபகுதியினர் விடுதலைசெய்யப்பட்டும், விடுதலை செய்யப்படாதவர்கட்கு எதிராக வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டு வருகிறது.

ஈழவிடுதலைப் போராட்டத்

[8ம் பக்கம் பார்க்க]

## '70 சி. சி'க்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாவித்தால் பறிமுதல் செய்யப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் '70 சி. சிக்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாவிக்கப்பட்டால் உடனடியாகப் பறிமுதல் செய்யப்படும் என்று இந்திய அமைதிப்படையின் யாழ் நகர அதிகாரி அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

'70 சி. சிக்கு' மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு ஏற்கனவே 'பாஸ்' வழங்கப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் அவற்றைப்பாவிக்க வேண்டாமென்றும் இந்திய அமைதிப் படையின் யாழ். நகர அலுவலகம் பொது மக்களைக் கேட்டுள்ளது.

'70 சி சிக்கு' மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களைப் பொதுமக்கள் பாவிக்கக்கூடாதென யாழ். நகர அலுவலகம் ஏற்கனவே பொதுமக்களுக்கு அறிவுறுத்தி தடைசெய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## மினிபஸ்ஸில் சிக்கி 12வயது சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை தபால் கந்தோர் முன்பாக மானிப்பாய் வீதியில் நேற்றுக்காலை 12 வயதுச் சிறுவன் ஒருவன் மினிபஸ்ஸில் தலை நெரியுண்டு ஸ்தலத்திலேயே பலியானார்.

நாவாந்துறையைச் சேர்ந்த பெரியான் விஜயேந்திரன் என்ற பாடசாலைச் சிறுவனே இவ்வாறு பலியானவராவர்.

சம்பவதினம் இச்சிறுவன் வீட்டிலிருந்துசைக்கிளில் புறப்பட்டு யாழ். பஸ்நிலையத்திலிருக்கும் தந்தையின் கடைக்குச் சென்றுகொண்டிருக்கும்போது மானிப்பாய் வீதியில் யாழ் பஸ் நிலையத்தை நோக்கி சென்றுகொண்டுருந்த மினி பஸ் ஒன்று பஸ்தரிப்பில் நின்று புறப்படும் போது அதன் பின்சில்லில் சிக்குண்டு பலியானார்.

(8ம் பக்கம் பார்க்க)

## பதிவகத்திலிருந்த காணி பதிவேடுகள் சேதம்!

(சுண்டுக்குளி)

யாழ் குடாநாட்டில் அண்மையில் ஏற்பட்ட அசம்பவிதங்களின்போது யாழ் காணிப் பதிவகத்தில் வைக்கப்பட்டிருந்த பல காணிப்பதிவேடுகள் சேதமடைந்துள்ளது தெரிய வந்துள்ளது.

யாழ் பழைய செயலகத்தில் இயங்கி வந்த மேற்படி காரியாலயத்தில் வைக்கப்பட்டிருந்த ஏராளமான பதிவேடுகள் சேதமுற்றிருப்பதாகவும் பல காணமல் போயுள்ளதாகவும் அத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## சவூதியிலிருந்து திரும்பிய உரும்பராய் வாசி குண்டுவெடிப்பில் பலி!

(யாழ்ப்பாணம்)

பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவில் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பலியானோரில் உரும்பிராயைச் சேர்ந்த ஒருவரும் பலியானார்.

உரும்பராயைச்சேர்ந்த அப்பாத்துரை அற்புதநாதன் (வயது 45) என்பவரே இக்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு நல்லஇன பசுக்கள் ஒரு சைக்கிள் விற்பனைக்கு உண்டு. 51/8, செட்டித்தெரு, நல்லூர். சி 2341

பிரவண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 19ம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி-2301)

கடைக்கதவு 12X7 அடி பலா பலகைக் கதவு விற்பனைக்குண்டு Omega, Manipay Road, Jaffna சி-238

சோனி ரீ வீ 2030, நஷனல் டெக், ஆபீஸ் மேசை சோபேஸ், ரீ வி ஸ்ராண் ஆகியன விற்பனைக்குண்டு யோசப், சித்தபா வீதி, சமகை, டண்டத்தீரிப். சி-2383

நல்ல இன பிறிமா குவாலிற்றி புறொய்லர் குஞ்சுகள் சனி, ஞாயிறு 20 21-ம் திகதிகளில் விநியோகிக்கப்படும். New No: 127, கஸ்தூரியார், யாழ்ப்பாணம். (சி-2393)

வர்த்தகர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் எங்கள் அரிசி உற்பத்தியை மீண்டும் 10-2-88 தொடக்கம் ஆரம்பித்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சுத்தம், சுவை, தரம் நிறைந்தது. விஜிதா நம். 1 நாட்டரிசி கல்லு இல்லாமல் கைதேர்ந்த தொழிலாளர்களால் கல் அரித்து தயார்க்கப்படுவது விஜிதா நம். 1 நாட்டரிசி. விஜயா கஸ்தர் விஜிதா அரிசி ஆலை, தாவடி, கொக்குவில். (சி-2250)

கோவில்களுக்குத் தேவையான பெரியமணி, திருவாசி, குத்துவிளக்கு, எதாபி, வைன்கப், மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், பூவாசு, செம்பு, பித்தளை, அலுமினிய பொருள், சிறிய பொருட்கள், சில்வர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஸ்ரீடியோ கசெட்டுகள் C 60, CD 60 CD 90, CB 50 டேர்புகளை எமது. பைல்ஸ் மெற்றல்ஸ் ஸ்ரோர்ஸ், 268 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (சி 2328)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் கட்டில், மெத்தைகள், சேட்டி பெட்டிகள், கண்ணாடி சோகேஸ், கண்ணாடி மேசைகள், சாப்பாட்டு மேசைகள், சகறடோடியோ, மற்றும் பல வீட்டுப் பொருட்களும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு M தியாகராஜா 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-239)

## மணப்பந்தல்

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த மணமகளுக்கு மணமகனைப் பெற்றோர் தேடுகிறார்கள் வயது 28 சீதனம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பரஇல. A 309 மேற்பார், ஈழநாடு, யாழ்ப்பாணம். ஏ 309

## சேவை

"கார்த்திகை சாய்" மீண்டும் சேவை செய்கிறோம். சுதீரசன் அன் கம்பனி, 28, குமார வீதி, கொழும்பு-11. ஏ-1858

## பயிற்சி

IDPயின் 'தெல்லிப்பழை' கிளையும் மீண்டும் Computer வகுப்புக்களை நடாத்த உள்ளதால் 22-02-1988 மாலை 2 30 மணிக்கு பழைய, புதிய மாணவர்கள் ஆலோசனைக்காக அழைக்கப்படுகின்றனர். (சி 2367)

IDP தலைமையகத்தால் மீண்டும் Computerவகுப்புக்கள் 'நெல்லியடியில்' தொடரவுள்ளதால், பழைய, புதிய மாணவர்கள் "Modern Education Centre" இல் 20-02-1988காலை 10-30 மணிக்கு கூடுமாறு வேண்டப்படுகின்றனர். சி-23 8

## அறிவித்தல்

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச் சாக்கு விற்பனை

எம்மிடம் 6000 வெற்றுச் சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவு திகதி 29-2-88 விண்ணப்படிவங்களை காரியாலயத்தில் 27-2-88 வரை பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர்
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
ஏ-308

## தெல்லிப்பளை

ப. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### கேள்விப்பத்திரம்

மேற்படி எமது சங்கத்தில் 10 000 க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்கு உண்டு பெலும் முழு விபரங்களும் கேள்விப்பத்திரச்சில் குறிப்பிடப்பட்டுள்ளது ரூ 5 0/- வைப்புப்பணமாக கலைமைக்காரியாலயச்சில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் கேள்விப்பத்திர விண்ணப்பம் 23-02 88 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் பொதுமுகாமையாளர், தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம், தெல்லிப்பளை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் பெட்டியின் முன்னிலையில் 23-02 88 ம் திகதி முற்பகல் 10 00 மணிக்கு திறக்கப்படும்.

பொது முகாமையாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
ஏ 312

## காணவில்லை

கடந்த 07-01-88 அன்று யாழ் நகரில் ஏற்பட்ட பதற்றத்தின்போது தபால் ஊழியரான எனது ரயம்ப் 77D107 (Triumph 77D107) சைக்கிள் வண்டியை வண்ணார்பண்ணை தபாலகத்துக்குமுன்னால் தவறவிட்டுவிட்டேன் அதனை எடுத்துச் சென்றவர்கள் சு மோகனராஜ், 44 புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம் என்ற எனது முகவரியில் ஒப்படைக்கும்படி பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஏ-305

## நன்றி நவில்வு



அமரர்
மா. சேதிலிங்கம்

7-01-88 இல் காலமான சிவத்தொண்டரும் முன்னைப் பட்டின ஜவுளி வர்த்தகருமான திரு. மா. சேதிலிங்கம் அவர்களின் மரணச்சடங்கிலும், 6-2-88 இல் நடைபெற்ற அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளிலும் கலந்து கொண்டு பல வழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

விசுவநாதர் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(சி 2384)

## 4-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
செல்லத்துரை
(பொன்னம்பலம் சன்ஸ் உரிமையாளர், தலவாக்கொல்லை)
(மறைவு: 05-03-1984)

நான்காண்டுகள் உருண்டோடிச் சென்றாலும் உங்கள் அன்பும், பண்பும் எங்கள் மனதைவிட்டு நீங்காது. உங்களின் நினைவுகள் என்றும் நிலைத்துள்ளன. உங்கள் ஆத்மசாந்திக்காக என்றும் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி பு செல்லத்துரை
தேவி, செ ராஜகுரேன்,
செ சுரேஸ் ஜா.
"புவனவாசா",
உடுவில் தெற்கு,
சுன்னாகம். (சி 1975)

## விற்பனைக்கு

(சிறப்) CEYTRA TEA (சிறது தேயிலை)
PURE CEYLON TEA (சுத்தமான லங்கா தேயிலை)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
விபரங்கட்கு:
இ. சிவசண்முகநாதன்
141/2, கோவில் வீதி, நல்லூர். (2351)

## G. A. Q. 88

துரித மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்
ஆரம்பம்: 19-2-88
(இன்று) மு. ப. 11-00
G. A. Q 1989 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
G. C. E A/L 88 Aug கலை, வர்த்தக வகுப்புக்களும் இன்று ஆரம்பமாகின்றன.

### கெயின்ஸ் கல்வி நிலையம்

நெல்லியடி. ஏ 310

## யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. யின் உடனடி

### நிவாரண ஒழுங்குகள்

1987ம் ஆண்டு ஆவணிமாதத்திற்கு பின் கலவரத்தால் பாதிக்கப்பட்டு தங்கள் குடும்பத்தலைவனை அல்லது தலைவியை இழந்தவர்கள் இந்நிவாரணத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர் இவர்கள் யாழ். மாநகரசபை எல்லைக்குள் அல்லது நாவற்குழி, கைதடி, கோப்பாய், உரும்பிராய், இருபாலை ஆகிய இடங்களில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல் வேண்டும்.

நிவாரணம் பெற விரும்பியோர் மாசி மாதம் 27ம் திகதிக்கு முன் யாழ் வை எம். சி ஏ பொதுக் காரியதரிசி திரு. எம். தப்பித்துரையுடன் தொடர்பு கொள்ளவும். (ஏ-304)

## Standard Elocution, Speech and Drama Classes for Children

சிறுவருக்குரிய விசேட ஆங்கில மொழிப் பயிற்சி (எலக்கியூஷன்) வகுப்புக்கள்

VENUE: Assembly of God Church, 14, Rasavinthottam Road, Jaffna.

ADMISSIONS: On 21-02-88 Sunday 3-00 p. m.

TUTOR: Mr. N. Thevapalasingham.
Retired Lecturer in speech and Methodology
Palaly Government Teacher's College.
Classes for adults have already commenced
Few more Vacancies).

(சி-2379)

## பௌதிகவியல் [A/L]

★ N. பத்மநாதன் B.sc [Hons]

1. மின்புலம் ஆரம்பம் 20 சனி
(சனி - ஞாயிறு 7-30 a.m.)

2. மீட்டல்வகுப்பு (சனி - ஞாயிறு 4-45 p.m.)

நிர்வாகி

### நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட்

திருநெல்வேலி.

(சி-2360)

## BECON

ஸ்ரீதர் சினிமா முன்பாக
யாழ்ப்பாணம்

A/L 88
கலை வர்த்தகம்
மீட்டல் வினாவிடை வகுப்புக்கள்
சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| பொருளியல் | S. வரதராஜன் | 1 00 p.m. |
| வர்த்தகம | ரட்ணம | 2.00 P.m. |
| கணக்கியல் | மரியதாஸ் | 3.00 p.m. |

ஆரம்பம்: 22-2-88
ஞாயிறு 1-00 p.m.
பகல் 3நேர வகுப்புக்கள் புதிய பிரிவு
ஆரம்பம்: 30-2-88

(சி 301)

லெபனானில்

# ஐ. நா. அமைதிப் படை அதிகாரி கடத்தப்பட்டார்!

பெய்ரூட், பெப் 18.

**லெபனானில் ஐ. நா. ஸ்தாபன அமைதிப்படையைச் சேர்ந்த அமெரிக்க ராணுவ அதிகாரி ஒருவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளார். கடந்த புதன் கிழமை கடத்தப்பட்ட இந்த அதிகாரியை மீட்பதற்கு ஐ நா. அமைதிப் படையினர் பரிவான தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்**

கேர்ணல் வில்லியம் ஹிக்கின்ஸ் என்பவரே கடத்தப்பட்டவராவார். தென்லெபனானின் துறைமுக நகரான ரயரில் வைத்தே இவர் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

ஐ. நா. செயலாளர் இக்கடத்தல் சம்பவம் குறித்து கவலை வெளியிட்டுள்ளார். அத்துடன் இந்த அதிகாரியை மீட்கும் நடவடிக்கைகளிலும் அக்கறைகொண்டுள்ளார்.

கேர்ணல் ஹிக்கின்ஸைக்கடத்தியோர் பற்றியவிபரம் மற்றும் கடத்தலுக்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை

ஆயினும் பி பி. ஸி. செய்தியொன்று வெளியிட்டுள்ள தகவலில், ஈரானிய பின்னணியைக் கொண்டு இயங்கும் 'ஹிஸ்புல்லா' என்ற குழுவினரே இக்கடத்தலை மேற்கொண்டிருக்கலாமெனத்தெரிவிக்கப்பட்டுள்ளது

கேர்ணல் ஹிக்கின்ஸ்க்கைகண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை ஐ நா. அமைதிப்படையினர் தீவிரமாக்கியுள்ளனர். ஹெலிகப்டரின் உதவியுடன் வீதித்தடைகள் போடப்பட்டு சோதனைகள் இடம்பெறுகின்றன ஐ நா படையினருக்கு ஷியாட் அமல் தீவிரவாதப் பிரிவினரும் இத்தேடுதல் நடவடிக்கையில்உதவியளித்து வருகின்றனர்.

கடந்த இருவார காலத்தில்

[7ம் பக்கம் பார்க்க]


## RIETAS ENTERPRISES

## A. பத்மதாஸ்

### பிரயாண ஒழுங்குகள்

சகலவிதமான பிரயாண ஒழுங்குகளும் எவ்வித தாமதமுமின்றி எமது புதிய முகவர் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★★★ முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

★★★ குறிப்பிட்ட நாட்களுக்குள் பிரயாணத்திற்கான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

| வெற்றிடங்கள் | மத்திய கிழக்கு நாடுகள் |
|---|---|
| I கூலியாட்கள் | LABOURERS |
| II சுத்திகரிப்பாளர் | CLEANERS |
| III சாரதிகள் | DRIVERS (H. V) |
| IV மரவேலை செய்பவர்கள் | CARPENTERS |
| V கட்டிடவேலை செய்பவர்கள் | MASONS |
| VI வீட்டுப் பணிப்பெண்கள் | HOUSE MAIDS |

மேலதிக விபரங்கட்கு எவ்வித தாமதமுமின்றி எமது காரியாலயத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்புகொள்ளலாம்.

காரியாலய நேரம் காலை 8 மணி — மாலை 4 மணி

கடிதமூலம் தொடர்புகொள்ளவிரும்புவோர் சுய விலாசமிடப்பட்ட முத்திரையொட்டிய கடிதஉறையுடன் கீழ்வரும் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

**A. பத்மதாஸ்,**
**இல. 97, பருத்தித்துறை வீதி,**
**கல்வியங்காடு - யாழ்ப்பாணம்.**

[சி-2359]


## ஜி.கே. மூப்பனார் தமிழக இ. காங்கிரஸ் தலைவர்

[சென்னை]

தமிழக இந்திர காங்கிரஸ் கட்சித் தலைவராக ஜி. கே. மூப்பனார் நியமிக்கப்பட்டுள்ளார் இவரின் இந்த நியமனத்தை பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

1980ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் திரு. ஜி கே மூப்பனார் அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கட்சிப் பொதுச் செயலாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## நியமனப்பத்திரம் கோரப்படுகிறது

[கொழும்பு]

மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் நியமனப் பத்திரங்களை மதர்தல ஆணையாளர் திரு: பத்திரானந்த டி சில்வா கோரியுள்ளார்.

25 மாவட்டங்களின் அடிப்படையில் வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். நியமனபபத்திரங்கள் மார்ச் மாதம் 2-ம் திகதி முதல் 9-ம் திகதி நண்பகல் 12 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படுமென்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். [சி]


# விக்னு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.]

## 0L, 9ம், 8ம், 7ம், 6ம், 5ம்

புதிய பிரிவு 22-2-88 — 2 45p.m.

மு. குறிப்பு: (i) கடமை, கட்டுப்பாட்டுடன் நடாத்தும் ஒரே நிறுவனம்
(ii மாணவர்கள் தரம் அறிந்து வகுப்புக்கள் பிரித்து போதிக்கப்படும்:
(iii) O/L. 9, 8, 7, 6, 5-ம் வகுப்புகளுக்கு தனித்துவம் மிக்க ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்.

(ஏ 307)


திருட்டுப்போன

## தஞ்சை நடராஜர் சிலையை மீளக்கையளிக்கும் படி தீர்ப்பு!

[லண்டன்]

தஞ்சாவூரைச் சேர்ந்த பட்டூர் விஸ்வநாதர் ஆலயத்தைச் சேர்ந்த நடராஜர் உலோக விக்கிரகம் ஒன்று பிரிட்டிஷ் நீதிமன்றமொன்றினால் இந்த ஆலயத்துக்கு மீண்டும் வழங்கப்படவுள்ளது

1976ம் ஆண்டு மேற்படி ஆலயத்திலிருந்து 32 அங்குலம் உயரமான அந்த உலோகசிலை பம்பாய் வழியாக திருடிச்செல்லப்பட்டது இச்சிலையை கனேடிய எண்ணெய்க் கம்பனியொன்று இரண்டரைக்கோடி டாலர்களுக்கு வாங்கியிருந்தது.

பின்னர் இச்சிலையை செப்பனிடுவதற்கு பிரிட்டிஷ் அரும்பொருட் காட்சியகத்திற்கு அந்த எண்ணெய்க் கம்பனி அனுப்பிவைத்திருந்தது

அவ்வேளையிலேயே ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிசார் இச்சிலையைக் கண்டுபிடித்து பிரிட்டனில் வழக்குத் தொடர்ந்தனர்.

விசாரணை முடிவில் இச்சிலை தஞ்சாவூர், பட்டூர் விஸ்வநாத

(7-ம பக்கம் பார்க்க)


# HICKS INSTITUTE

சாவகச்சேரி, — கொடிகாமம்.

## O/L, 9ம், 8ம், 7ம், 6ம்,

புதிய வகுப்புக்கள்

கணிதம்: S. BALAN

ஆரம்பம்: 20-2-88 (சனி காலை)

[சி 2394]



# JAFFNA ENGLISH ACADEMY

★ TOEFL: Countries where English is the language of instruction require TOEFL scores of applicants who are non-native speakers of English. Most government agencies scholorship programmes and other institutions also use TOEFL test scores. There are no fixed passing or failing scores for the TOEFL test. Each institution or agency that requires the scores decides what scores are acceptable for its purposes.

Duration: 3 months
Course fee Rs 25 /- only
Lectures: KANDIAH NAVARENDRAN

★ HIGHER ENGLISH COURSE: (a crash course)
This unique course comprises the following syllabus Shakespeare's Romeo & Juliet Shaw's Arms and the Man, Dickens's Hard Times, poetry essays precis, idioms, comprehension, grammar etc.

Duration: 4 months
Course fee: Rs. 350/- only
Lectures: KANDIAH NAVARENDRAN

★ SPOKEN ENGLISH: (a crash course)
English is caught rather than taught, and the best way of learning it is by speaking it
Duration: 3 months.
Course fee: Rs. 125/- only.
Lectures: Mrs E. R. MATHER.

★ BASIC ENGLISH / G. C. E. (O/L) ENGLISH: (a crash course)
Duration: 3 months.
Course fee: Rs. 125/- only.
Lectures: KANDIAH NAVARENDRAN


★ ELOCUTION
Two Batches (1) 6 முதல் 13 வயதுவரையினருக்கு
(2 14 வயதுக்கு மேற்பட்டோருக்கு
Duration: 3 months.
Course fee: Rs. 125/- only.
Lectures: Mrs. E. R. MATHER

★ ஆண்டுகள் 8/9 க்கான ஆங்கிலம்
மாதாந்த கட்டணம்: ரூபா 30/-
ஆண்டுகள் 6/7 க்கான ஆங்கிலம்
மாதாந்த கட்டணம்: ரூபா 25/-
ஆசிரியை: திருமதி E R மேதர்

Students' individual ability will be considered and their motivation encouraged.

9, ரக்கா லேன்,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(A-2374)



'ஈழநாடு' ஆரம்பித்து 30-வது ஆண்டில் காலடிவைக்கும் நிகழ்ச்சியும் ஸ்தாபகர் அமரர் கே ஸி. தங்கராஜாவின் திருவுருவட்பட திரைநீக் கமும் கடந்த 11 ம் திகதி இடம்பெற்ற சமயம் எடுக்கப்பட்ட படங்கள். இடமிருந்து: பொது முகாமையாளர் து. சீனிவாசகம், பேராசிரியர் சிவ ஞானசுந்தரம் (நந்தி), நிர்வாகப்பணிப்பாளர் திரு ஆர். இராஜலிங்கம் ஆகியோர் குத்துவிளக்கேற்றுகிறார்கள். நடுவில் அமரர் கே ஸி. ரி. யின் உருவப்படம். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நிர்வாக ஆசிரியர் திரு. என் சபாரத்தினம், அமரர் கே ஸி தங்கராஜாவின் உருவப்படத்தை வரைந்து வழங்கிய கலைஞர் திரு. இலங்கைநாயகம் (லங்கா) மற்றும் பிரமுகர்கள் காணப்படுகிறார்கள். (படங்கள்: 'தேவா')

## நோயாளர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை உள்நோயாளர் பிரிவு இதுவரை செயல்படாமையினால் நோயாளர் பெரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த வைத்திய சாலையின் வெளிநோயாளர்பிரிவு இயங்கிவரும் அதேவேளையில் உள்நோயாளர் பிரிவு இயங்காமலிருப்பது பெரும் குறையாக இருக்கிறது

உள்நோயாளர் பிரிவு இயங்குவதற்கான சகல வசதிகளும் இவ்வைத்தியசாலையில் இருந்தும் செயல்படாமைக்கான காரணம் தெரியவில்லை என்று இப் பகுதி மக்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். [ஓ]

## சீருடைகள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள சிற்றூழியர்களுக்கு கடந்த மூன்று வருடங்களாக சீருடைகள் வழங்கப்படவில்லை எனப்புகார் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி ஊழியர்களுக்கு வருடாவருடம் சீருடை வழங்கப்பட்டு வருவதாகவும் கடந்த மூன்று வருடங்களாக இச்சீருடைகள் வழங்கப்படவில்லை எனவும் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். [ஓ]

## புதிய நிர்வாகிகள்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி சனசமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் எஸ் தாமசிவகம் தலைமையில் அண்மையில கிளிநொச்சி நகரில் நடைபெற்றது

பின்வருவோர் பதிய நிர்வாகிகளாகத் தெரிவானார்கள்:-

தலைவர்: செல்லையா சிவசாமி, உபதலைவர்: டாக்டர் கே. ஏ. கே. கமலோகமூர்த்தி, இணைச் செயலாளர்கள்: ரி. எஸ் தாயசிங்கம், எஸ் பொன்னம்பலம், பொருளாளர்: ஆர் தன்ஸ் கிருஷ்ணமூர்த்தி, காப்பாளர்கள்: மேலதிக அரச அதிபரும், பிரதிக் காணி ஆணையாளருமான எஸ் முருகவேள, திரு குணரத்தினம், திரு சின்னத்தம்பி ஆகியோர்

மேலும் ஒன்பதுபேர் நிர்வாக சபைக்குத் தெரிவானார்கள்.

## பண்பாடிப் பணி புரிந்தவர்



திருமுறைகளைப் பண்முறை வழுவாது பாடிக் கேட்போர் உள்ளங்களைப் பரவசமடையச் செய்யும் பணியையும், மாணவருக்குப் பண்ணிசை முறைட்படி பயிற்றும் பணியையும் மிகவும் சிறப்புடன் செய்து வந்த பெரியார் அண்மையில் இறைவனடி சேர்ந்த பண்ணிசைப் புலவர், ஓதுவார் மூர்த்தி அமரர் வி ரி வி சுப்பிரமணியம்

அமரர் சுப்பிரமணியம் தமிழ் நாட்டில் யாத்திரை மேற்கொண்டபோது திருமயிலாப்பூர் அருள்மிகு கபாலீச்சுரா தேவஸ்தானத்தில் அமைந்துள்ள திருமுறை மண்டபத்தில் திருமுறைப் பண்ணிசை அரங்கேற்றமும், ஓதுவார் மூர்த்திப் பீடாரோகணமும் பெற்றுப்பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நல்லூர் சம்பந்தர் ஆதீனத்திலும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், வேலைக்கைப் பிள்ளையார், மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய இடங்களிலும் திருமுறை வகுப்புக்களைச் சிறப்புற நடத்தியதுடன், வட இலங்கைச் சங்கீத சபையால் நடாத்தப்படும் திருமுறைப் பரீட்சைகளுக்கும் மாணவரைப் பயிற்றுவித்ததுடன், பல மாணவ, மாணவியரை ஆசிரியர் தராதரம் பெற்றவர்களாக ஆக்கிய பெருமையையும் உடையவர்.

-மாணவன்.

## திருமலைக்கும் பஸ்சேவை

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை - திருகோணமலை பஸ் சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது

பருத்தித்துறை போக்குவரத்துச்சபை டிப்போவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவையிலீடுபடும் பஸ் தினமும் காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு புறப்படுகின்றது. இதேபோல திருகோணமலையிலிருந்தும் காலை 7 மணிக்கு பருத்தித்துறைக்கான பஸ் புறப்பட்டுவருகிறது.

## வெங்காயபூவுக்கு வந்த கதி

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப்பூ தேடுவாரற்று வீதியோரங்களிலும் குப்பைகளிலும் கொட்டப்படுகிறது

கொழும்புக்கு எடுத்துச் செல்லவாகன வசதியின்மையால் பெருவாரியாக தேக்கமடைவதாலேயே இவ்வாறு கொட்டப்படுகிறது.

இப்பகுதி சந்தைகளில் ஒரு பிடி வெங்காயப்பூ 25 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## யாழ் தொழில் நுட்பக் கல்லூரி பொறியியல் நெறி நாளை ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் சுமார் நான்கு மாத இடைவெளிக்குப்பின்னர் சகல பாடநெறிகளும் மீண்டும் அண்மையில் ஆரம்பமாகியுள்ளன

பொறியியல்பாடநெறி மாத்திரம் நாளை 20-ம் திகதி ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது இதற்கான ஒழுங்குகளை கல்லூரி அதிபர் எஸ் இராஜேந்திரா செய்துள்ளார்.

இத்தவேளை கல்லூரியின் இறுதிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் மாணவர்களிடமிருந்து கோரியுள்ளது. இதற்கான விண்ணப்பமுடிவு திகதி ஏப்ரல் மாதம் 8ம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது

கடந்த அக்டோபர் மாதத்தின் பின்னர் இக்கல்லூரியைச் சேர்ந்த நான்குபேர் அகால மரணமடைந்துள்ளார்கள் வர்த்தகத்துறை தலைவர் அ இரத்தினம், பொறியியல்துறை விரிவுரையாளர் கே. சிவலோகநாதன் ஆகியோரும் இதில் அடங்குவார்கள்.

## நியமனக் கடிதங்கள்

[பண்டத்தரிப்பு]

சுகாதாரத் திணைக்களப் மருந்துக் கலவையாளர்களின் சேவையை மத்தியதர தொழில் நுட்பவியலாளர் தரத்தில் சேர்ப்பது என்று தீர்மானித்ததற்கு இணங்க யாழ் பிரதேசத்தில் கடமையாற்றும் சகல மருந்துக் கலவையாளர்களுக்கும் இதற்கான நியமனக் கடிதங்களை இவ்வாரம் அனுப்பி வைத்துள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதார சேவைப்பணிப்பாளர் நாயகத்தினால் யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த இந்த நியமனக் கடிதங்கள் மேற்படி அலுவலகத்தினால் யாழ் மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருந்துக் கலவையாளர்களுக்கு தனித்தனியாக இவ்வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



உடுப்பிட்டியைச் சேர்ந்த சின்னப்பு ஆறுமுகம் சிவபதம் அடைந்து ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது உடுவில் மான்ஸ் பாடசாலை, பரமேஸ்வரா கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் இவர் ஆரம்பத்தில் புத்தளம் கச்சேரியிலும் பின் குருநாகல், கண்டி, பதுளை ஆகிய இடங்களில் கச்சேரி காணிக்கந்தோர் தலைமை லிகிதராக பணிபுரிந்தார் பின் யாழ் கச்சேரியில் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் காரியாலய உதவியாளராகவும் பணி புரிந்த சின்னப்பு ஆறுமுகம் 37 ஆண்டு சேவையின் பின், மொழிப்பிரச்னை காரணமாக 3 ஆண்டுகள் முன்னராக ஓய்வுபெற்றார். திரு. ஆறுமுகம் தெல்லிப்பழை ஐக்கிய கூட்டுறவு வைத்தியசாலை ஸ்தாபக அங்கத்தவராக இருந்து அதன் வளர்ச்சிக்காக பாடுபட்டு உழைத்தவர்.

ஓர் அன்பர்.

## பாடசாலைகள் தர மீளாய்வு

(உடுப்பிட்டி)

வடமராட்சி கோட்டக்கல்விப் பகுதியிலுள்ள பாடசாலைகள் தர மீளாய்வு செய்யப்படவுள்ளன.

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, நெல்லியடி, கரவெட்டி கொத்தணிப் பாடசாலைகளை தர மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் இம்மாதம் 25-ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பெண்கள் பிரிவில் நடைபெறவுள்ளது

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி செல்வி தி பெரியதம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம். மன்சூரும் கலந்துகொள்வார்.

## பதவி உயர்வும் இடமாற்றமும்

[பண்டத்தரிப்பு]

யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ் கிருஷ்ணபிள்ளை இம்மாதம் தொடக்கம் பிரதி விவசாயப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று பேராதனை விவசாய திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார் இவர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொறுப்பான பிரதி விவசாயப் பணிப்பாளராக அங்கு கடமையாற்றுவார் இவரின் இடத்திற்கு கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றும் திரு எஸ் பத்மநாதன் இடமாற்றம் பெற்றுள்ளார்.

## அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கொட்டடி நமசிவாய சனசமூக நிலைய புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நட்டுவிழா இன்று 19-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது

கட்டிடத்திற்கான அடிக்கல்லை சிவதமவள்ளல் க. கனகராசா நாட்டிவைப்பார்.

## நிவாரணம் வழங்க நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு வை எம் சி ஏ அண்மைக்காலத்தில் பண்டத்தரிப்பு பார்ஷ் பகுதியில் அசம்பாவித சம்பவங்களினால் தங்கள் உடைமைகளை இழந்து நிர்க்கதியாக இருக்கும் மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் அதற்கான ஆதாரங்களுடன் வை எம் சி ஏ அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



## மங்கையர் திலகம்

மனைமாட்சியில் மிக்க சிறப்புடையவராய், இல்லத்திற்கோர் இலட்சுமியாய் விளங்கியவர் அமரர் சிவக்கொழுந்து குணரத்தினம். அவர் குடும்பம்பரமும், இறைபரமும் முதிர்ந்தவராய்த் திகழ்ந்தார்.

சமயம் என்பது வார்த்தையில் அல்ல என்பதை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார் அவர்

சிவக்கொழுந்து அம்மாவின் திடீர் மறைவு அவரை அறிந்தவர்களுடைய இதயத்தைப் பெரிதும் நெகிழச் செய்துவிட்டது

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, வானவன் மலரடி சென்ற அம்மாவின் ஆன்மா சாந்தியடையத் திருவருளை அவரின் குறைகளை மன்னித்து நிறைவாக்க வேண்டுவோம்.

துரை. ஆரோக்கியதாசன்

# உலகில் பல்வேறு வடிவங்களில் தலைவிரித்தாடும் இனப்பிரச்னை

மனித இனத்தில் நிலவுகிற இனப்பிரிவுகள்— அந்தப் பிரிவு மக்களின் பெருக்க விகிதம் ஆகியவை உலக அளவில் பல்வேறு பிரச்னைகளை உண்டாக்கி வருகின்றன. இன்றைய பெருக்கவிகிதம் இப்படியே தொடர்ந்துவரும் நிலையில் இனமோதல் பிரச்னைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. இனமோதல் பிரச்னை என்றாவது ஒருநாள் உலகையே உலுக்கி எடுப்பதாக இருக்கும்.

இனங்களுக்கு இடையிலான போட்டிகள் பல்வேறு முறைகளில் நிகழ்கின்றன. ஜனநாயக முறையில் முதிர்ந்தநாடுகளில் கூட அதிகார மாற்றம் ஓட்டு என்கின்ற சுலபமான ஆயுதத்தின் மூலம் நடந்துவிடுகிறது. அந்த உரிமை மறுக்கப்படுகிற அல்லது உரிமைகளில் ஏற்றத்தாழ்வு அளவுகோல்களைக் காட்டுகிற நாடுகளில் ஆயுதப்போராட்டங்கள் எழும்பி விடுகின்றன. ஓட்டின் மூலம் அதிகாரமாற்றத்தை அடைந்துவிடுவதற்கு உதாரணமாக அமெரிக்காவின் நகர்ப்புறப்பகுதிகளைக் கூறலாம். 1960லும் 1970லும் அமெரிக்க வெள்ளையர்கள் நகர்ப்புறங்களைவிட்டு வெளியேறினர். அந்த இடங்களை கறுப்பர்கள் நிரப்பினர். நகர்ப்புறங்களை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து வெள்ளையர்களுக்கு நகரமேயர் தேர்தல்களில் வாக்குத் தகுதி இல்லாது போயிற்று.

1960ல் அட்லாண்டாவில் வாக்குரிமை பெற்ற மக்களில் கறுப்பர்கள் 38 சதவீதமாக இருந்தனர். அடுத்த பத்து ஆண்டுகளில் கறுப்பர்களின் தொகை 51 சதவீதமாக உயர்ந்தது. அப்படியும் கூட வெள்ளையர்களே பெரும்பான்மை வாக்காளர்களாய் இருந்தனர். இதற்குக்காரணம் கறுப்பர்களிடையே தங்களது வாக்குரிமையைப் பதிவு செய்துகொள்கிற வழக்கம் குறைவாக இருந்ததுதான்.

ஆனால் அப்படியும் கூட பதிவு செய்துகொண்ட கறுப்பர்கள் தங்கள் வாக்குகளைக் கறுப்பர் வேட்பாளர்களுக்கே அளித்தனர். 1973ல் அட்லாண்டாவின் முதலாவது கறுப்பு மேயராக ஜாக்சன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலிருந்து கறுப்பர் வேட்பாளர்களுக்கே வாக்களிப்பது என்ற முறை கறுப்பர்களிடம் தொடர்ந்தது. 1970களில் மேலும் மூன்று அமெரிக்க நகரங்கள் கறுப்பர் மேயர்களைத் தேர்ந்தெடுத்தன. அவை கேரி, நியூயோர்க் மற்றும் வாஷிங்டன் டிசி போன்ற நகரங்களுக்கும் பரவின. இன்றைய அளவில் அமெரிக்காவின் முன்னூறுக்கும் மேற்பட்ட நகரங்களைக் கறுப்பர்களே ஆளுகிறார்கள்.

பிரிட்டனின் அரசியலில் வெள்ளையரல்லாதார் ஆதிக்கம் என்பது மிகக்குறைந்த அளவில்தான். கட்சிகளுக்கே பிரதான இடம். பிரிட்டனில் இருக்கிற கறுப்பர்கள் தங்களது வாக்குகளைக் கறுப்பர் வாக்காளர்களுக்கே அளிப்பார்கள் என்று கூறிவிட முடியாது. 1983ம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் மான்செஸ்டர் மத்திய தொகுதியில் போட்டியிட்ட ஏஷியன் சோஷியல் டெமாக்கிரடிக் கட்சியின் வேட்பாளருக்கு வெள்ளையரின் வாக்குகளில் 5 சதவீதம் கிடைத்தது. வெள்ளையர் அல்லாதாரின் ஆதரவு அவருக்கு 16 சதவீதம் கிடைத்தது. ஆனால் 81 சதவீதம் வெள்ளையர் அல்லாத வாக்காளர்கள் லேபர் கட்சியின் வெள்ளையர் வேட்பாளருக்கே அளித்தனர். இரண்டு பர்மிங்காம் தொகுதிகளிலும் கூட இனவழிச்சிறுபான்மையினரின் பெரும்பாலான வாக்குகள் ஆறு நான்கு பங்கு லேபர் கட்சிக்கே கிடைத்தன.

கட்சிரீதியாக வாக்களிக்கிற பிரிட்டனின் அரசியல் முறை காரணமாக 1983ல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அத்தனை உறுப்பினர்களும் வெள்ளையர்களாகவே இருந்தனர். ஆனால் 1987ம் ஆண்டில் நடந்த தேர்தலில் இனவழிச் சிறுபான்மையினரின் ஆதரவை மனதில் கொண்டே லேபர்கட்சி செயல்பட்டது. லேபர்கட்சி 14 வெள்ளையர் அல்லாத வேட்பாளர்களைத் தனது கட்சியின் சார்பில் நிறுத்தியது. அதில் மூன்று பேரை 20 சதவீதத்துக்கும் மேலாக பெரும்பான்மை ஆதரவுள்ள தொகுதிகளில் நிறுத்தியது. அவர்கள் மூவருமே வெற்றிபெற்றனர். இந்த மூவரைத் தவிர வெள்ளையர் அல்லாத இன்னொருவேட்பாளரும் வெற்றிபெற்றார்.

ஆனால் பல நாடுகளில் பெருக்கத்தைப் பிரதிபலிக்கச் செய்கிற ஜனநாயகரீதியான அரசியலை நடத்தப் பல நாடுகள் தயாராக இல்லை. ஆளும் இனத்தவரின் ஜனநாயகமற்ற போக்கு அங்கே தலைதூக்குகிறது. சிறுபான்மையினரது உரிமைகள் மறுக்கப்படுகிறது.

சிறுபான்மையினரை வாக்களிக்கவிடாமல் தடுத்துவிட மூன்று வழிமுறைகள் கையாளப்படுகின்றன. அதில்மிகவும் சுலபமானமுறை சோவியத் யூனியன் கடைப்பிடிக்கிற முறையாகும். சோவியத்யூனியனில் ஆட்சி அதிகாரம் வாக்குகளைச் சார்ந்ததல்ல. எனவேதான் உஸ்பெக்ஸ தாட்ஜிக்ஸ் போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லீம்கள்- அவர்கள் சோவியத யூனியனின்மக்கள்தொகையில் 50 சதவீதமாக இருந்தாலும் ருஷ்யர்களுடன் போட்டி போடமுடியாமல் இருக்கிறார்கள்.

வேறுசில நாடுகள் ஜனநாயக நாடுகள் என்று கூறிக்கொண்டு இனவழி ஆதிக்கத்தை நடத்திக்கொண்டிருக்கின்றன. மற்ற இனத்தவர்களுக்கு வாக்குரிமை என்று ஒன்றை வழங்கிவிட்டு ஆனால் அதிகாரம் எதையும் தராமல் முடக்கி ஜனநாயக நாடுஎன்று இவை தங்களைக் கூறிக்கொள்கின்றன. இதற்கு உதாரணமாக கயானாவையும் பிஜியையும் கூறலாம்.

கயானா, பிஜி ஆகியஇருநாடுகளுமே பிரிட்டனின் காலனி நாடுகளாக இருந்தவை. இந்த இருநாடுகளிலுமே பிரிட்டிஷார் வந்திறங்கியபோது அங்கிருந்த இனங்களை அப்படியே பாதுகாத்தார்கள். இந்த இரண்டுநாடுகளிலுமே இந்தியர்கள் அதிகம் வாழ்கிறார்கள்.

கயானாவில் 1950ல் கட்சிஅரசியல் நடைமுறைக்கு வந்தபோது கறுப்பர்களைவிட ஆந்தியர்கள் அதிகமாக இருந்தனர். 1957லும் 1961லும் நடந்த தேர்தல்களில் இந்தியமக்கள் முன்னேற்றக் கட்சி கறுப்புமக்களின் தேசிய காங்கிரசைத் தோற்கடித்தது. இதனால்கறுப்பர்கள் கோபமடைந்தனர். கலவரங்கள் நடந்தன. இந்தக்கலவரங்களைக் கண்டும் இந்திய கட்சியின் மாக்சிய தாக்கத்தைக்கண்டும் பிரிட்டிஷ் கவர்னர் கறுப்பர்களுக்கு ஆதரவாக அரசியல் சட்டத்தை திருத்தி அமைத்துவிட்டார். 1964ல் வாக்களிப்பின் மூலம் ஆட்சிஅமைக்கிற முறை மாற்றப்பட்டது. அதற்குப் பதிலாக விகிதாசார பிரதிநிதித்துவ முறைகொண்டுவரப்பட்டது. அதன்மூலம் கறுப்பர்களும் கயானாவின் மக்கள்தொகையில் பத்தில் ஒரு பங்கினரே ஆன வெள்ளையர்கள் அல்லது அமெரிக்க இந்தியருடன் சேர்ந்து இந்தியர்களைத் தோற்கடித்தனர்.

பிஜியின் விஷயம் இந்த அளவுக்குக்கூட இல்லை, 1946 லேயே பிஜியில் இந்தியர்களின் எண்ணிக்கை பிஜியின மெலனேஷியர்களைவிட அதிகமாகி விட்டது. ஒருவருக்கு ஒரு வாக்கு என்கிற ஜனநாயக முறையை இந்தியர்கள் கோரினார்கள். அதை பிரிட்டிஷார் மறுத்து விட்டனர். 1970-ல பிஜிக்கு சுதந்திரம் வந்தது. அதைத் தொடர்ந்து உண்டான அரசியல் அமைப்புச் சட்டமும் பிஜியின் பூர்வகுடிகளுக்குச் சாதகமான முறையிலேயே அமைக்கப்பட்டது. 22 பேர் கொண்ட செனட் சபைக்கு எட்டுபேரை மெலனேஷியன் மகாசபைத் தலைவர்களே நியமித்து விடுவார்கள் பிரதிநிதிகள் சபைக்கும் ஒரு பகுதி உறுப்பினர்கள் இன அடிப்படைவாக்கு முறையில்லாமல் நியமிக்கப்படுவார்கள். இதுவும் மெலனேஷியர்களுக்குச் சாதகமாகவே செய்யப்பட்டது.

தென்னாபிரிக்காவில் ஜனாதிபதி போதா பிஜியில் பிரிட்டிஷார் கொண்டு வந்த இன அடிப்படையிலான வாக்கு முறையைக் கொண்டுவர முயன்று கொண்டிருக்கிறார். அதாவது வெள்ளையர் இனத்திற்குச் சாதகமாக ஆட்சி முறையைக்கொண்டுவர முயல்கிறார் கிட்டத்தட்ட அதிகாரமே இல்லை பாராளுமன்றப்பிரிவுகளை உண்டாக்கி அவற்றில் இரண்டுக்கு 1984 இல் தேர்தல் நடத்தினார். இந்த இரண்டில் ஒன்று கலப்புஇனத்திற்கான பாராளுமன்றம் மற்றொன்று இந்தியர்களுக்கானது ஆனால், அந்தத் தேர்தல்கள் வெற்றி அடையவில்லை பெரும்பான்மையான மக்கள் தேர்தலை புறக்கணித்து வாக்களிக்காமலே இருந்துவிட்டனர். இந்தத் தேர்தலில் தோல்வியுற்று விட்டதால் கறுப்பர்களுக்கான பாராளுமன்றப் பிரிவுக்கான தேர்தலைப் போதாவால் நடத்த முடியவில்லை.

தென்னாபிரிக்காவின் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண வேறு வகையிலும் அரசாங்கம் முயன்றது. நாட்டைப்பிரித்து கறுப்பர்களுக்குத் 'தாய்நாடுகளை' உருவாக்க முயன்றது. கறுப்பர்களுக்கு வாக்குரிமை இருக்கும். ஆனால், அவர்கள் வெள்ளையர்களின் தென்னா

(6ம் பக்கம் பார்க்க)

FIRST TIME IN JAFFNA

விசேட ஆங்கில வகுப்பு

To help you begin, build up & enrich your English

An Integrated English COURSE

6 மாதகால தீவிரப பயிற்சி

முன்னணி ஆசிரியர்களின் இணைந்தசேவை.

திரு. T. N. பஞ்சாட்சரம், திரு. C S நாயகம்

பாடத்தொகுதி:

★ ENGLISH SPEECH PRACTICE
★ GRAMMAR AND USAGE
★ VOCABULARY ENRICHMENT
★ READING WITH UNDERSTANDING
★ PRACTICE IN WRITING

ஆரம்பம்: 5-3-88

○ இலவச அச்சடித்த பாடக்குறிப்புக்கள்
○ சனி, ஞாயிறு வகுப்புக்கள்
○ கட்டணம் ரூபா 450/- [முழுப்பயிற்சிக்கும்]
○ சகல மாணவர்களுக்குமுரியது.

விபரங்களுக்கு;-

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD - JAFFNA.

எ-303

அஷ்டலக்ஷ்மி

தினத்தாள் கலண்டர்

நிறுவனத்தினரின் புதிய தலைமுறையினருக்கான மற்றுமொரு தயாரிப்பு!

இம்மாதம் 25ல் வெளிவருகின்றது

அஷ்டலக்ஷ்மி டெஸ்க் டயறி

[DESK DIARY]

ஒருபக்கத்தில் மூன்று தினங்கள்

116 பக்கங்கள் அறிமுக விலை ரூபா 15/- மட்டும்

அத்துடன்

இரு வர்ண பஞ்சாங்க கலண்டர் இலவசம்

மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்படுகின்றது. காலம் சிறிது தாமதமானாலும் காலத்தால் அழியாத சிறந்த படைப்பு. தினமும் ஒவ்வொரு பொது அறிவுக்குரிய விடயம் படிக்க வாய்ப்பு இருப்பதால் அனைவருக்கும் உகந்தது ஆண்டு மாதம், திகதி தெரிந்தால் கிழமையைக் கண்டுபிடிக்கும் வாய்ப்பாடு நேரசூசி தபால் தந்தி விபரங்கள் மற்றும் பிரதான கருமங்கள் யாவும் அமைந்துள்ளன பின்கவர் உலகப் படத்தினால் அழகுபடுத்தப்பட்டு முக்கிய நாடுகள் குறிக்கப்பட்டுள்ளன இது எவருக்கும் டயறியாகவும், பொதுஅறிவுக்களஞ்சியமாகவும் பயன்படும்.

பரிசுப்போட்டி ரூபா 1500/-

விபரங்கள் டயறியில் உண்டு. மொத்தம் 50 பரிசில்கள் பெறவாய்ப்புண்டு முடிவுகள் நல்லூர் தேர்த்திருவிழாவன்று வெளியாகும்.

அஷ்டலக்ஷ்மி தினக்குறிப்பு வாங்கும்போது மலிவானதும் பெறுமதியானதும் என்பதை நீங்களே நிச்சயப்படுத்துவீர்கள். குறிப்பிட்ட ஒரு தொகையையே வெளியிடுவதால் உங்களுக்குத் தேவையானவற்றை எம்முடன் இன்றே தொடர்பு கொண்டு ஒதுக்கிக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு;

சிவா பிறின்டேர்ஸ்

த. பெ. இல. 1, கைதடி.

[2573]

# உலகில் பல்வேறு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆபிரிக்காவில் போட்டியிட முடியாது. இந்த முயற்சியும் தோல்விகண்டது.

இன்னும் நிறைய நாடுகள் தங்களது ஆக்கிரமிப்பின் மூலமோ, அல்லது வேறுவகையிலோ, தங்களது அதிகாரத்தின்கீழ் வந்துவிட்ட வெளிநாட்டினருக்கு உரிமைகள் அளிக்காமல் தவிர்த்துக் கொண்டிருக்கின்றன.

1967-ல் இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பாலஸ்தீனியர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டு விட்டது. அவர்களுக்குக் குடியுரிமை அளிக்கப்படுமானால் இஸ்ரேலின் ஐந்தில் இரண்டு பங்கு பகுதி, யூதர்கள் அல்லாதவர்களைக் கொண்டதாகி விடும்.

ஐக்கிய அரபு எமிரேட்டில் 1968 க்கும் 1985 க்கும் இடையில் சொந்த இனத்தின் மக்கள் தொகை 3-80 சதவீதம் கூடியிருக்கிறது. எனினும் 1985-ம் வருடக் கணக்குப்படி அங்கு உழைக்கிற மக்களில் பத்தில் ஒன்பது பேர் வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்தான் இப்படி வந்தவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியாக இருக்கிறார்கள். இவர்களுக்குச் சட்டப்படியான வாக்குரிமை கிடையாது. செய்கிற தொழிலுக்குப் பாதுகாப்பும் இடையாது. மற்ற உரிமைகளோ, சேமநலத் திட்டப் பலன்களோ கூடக்கிடையாது

கயானாவில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தாறுமாறாக மாற்றிக்கொண்டதன் மூலம் பெற்ற வெற்றிகூட தற்காலிகமானதுதான். இந்தியர்களிடம் இருந்து அதிகாரத்தைப் பறிக்கும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப் பட்டதற்குப் பிறகும்கூட கயானாவில் இந்தியர்களின் மக்கள் தொகை வளர்ந்து கொண்டே வந்தது 1960 ல் கயானாவின் மக்கள் தொகையில் இந்தியர்கள் 48 சதவீதமாக இருந்தனர் 1970 இல் அவர்கள் 52 சதவீதமாகப் பெருகி விட்டனர். இதன் மூலம் கறுப்பர்கள், வெள்ளையர்கள் அமெரிக்க இந்தியர்கள் ஆகியோரது கூட்டணியைவிட இவர்கள் அதிகமாகிவிட்டனர் 1978-ல் நடந்திருக்க வேண்டிய தேர்தலை கறுப்பர் அரசாங்கம் பிற்போட்டது 1980 ல் தேர்தல் நடந்தது. அரசு ஆதரவாளர்கள் இரண்டுமுறை வாக்களித்தனர் இந்தியர்கள் பலருக்கு வாக்குரிமையே மறுக்கப்பட்டது. அதாவது 'பலர் இறந்து விட்டார்' என்று குறிப்பிடப்பட்டு வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து வாக்குரிமையின் மூலம் உரிமைகள் மறுக்கப்படும்போது, நசுக்கப்படுகிற இனங்கள் வன்முறையைக் கையாள ஆரம்பித்து விடுகின்றன. இதற்கு உதாரணமாக லெபனான் விஷயத்தைக் கூறலாம். 1943-ல் பிரான்ஸ் தலைமையின் பிடியில் இருந்து லெபனானை விடுவித்தது அப்போது ஒரு தேசிய உடன்படிக்கையை ஏற்படுத்தினர். மதங்களின் அடிப்படையில் அந்தந்த மதத்தைச் சேர்ந்த மக்கள் தொகைகளையொட்டி, அதன் அடிப்படையில் அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டது. 1932-ல் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கின்படி லெபனானின் மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் 29 சதவீதம் இருந்தனர் அவர்களை அடுத்து ஷுன்னி முஸ்லீம்கள் 22 சதவீதம் இருந்தனர். ஷியா முஸ்லிம்கள் 20 சதவீதம் இருந்தனர் ட்ரூஷி இனத்தவர் 7 சதவீதம் இருந்தனர் இந்த விகிதப்படி தேசிய உடன்படிக்கையின்படி, ஜனாதிபதி கிறிஸ்தவராக இருக்க வேண்டும் பிரதமர் ஷுன்னி முஸ்லீம் பாராளுமன்ற சபாநாயகர் ஷியா முஸ்லிம் இந்த மாதிரி அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் 5.6 என்கிற விகிதத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது

காலப்போக்கில் இந்த மதப் பிரிவின் படியான பிரதிநிதித்துவ முறைக்கு எதிர்ப்புக் கிளம்பியது அதற்குக் காரணம் கிறிஸ்தவர்களைவிட ஷுன்னி முஸ்லிம்களைவிட, ஷியா முஸ்லிம்களின் தொகை அதிகமாகிவிட்டது ஆனால் 1936 க்குப் பிறகு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படவேயில்லை 1970-ம் ஆண்டுகளிலேயே ஷியா முஸ்லிம்கள் மற்றவர்களை விட அதிகமாகிவிட்டனர் ஆனால் கிறிஸ்தவர ஜனாதிபதியாக இருந்தார். அவர் ஷியாக்களுக்கு அரசில் பெரிய பங்கு தர மறுத்துவிட்டார், அதைத் தொடர்ந்து 1974-ல் ஷியா முஸ்லிம்களின் தலைவரான இமாமம் மூஸாசடார், சுமார் 75 000 பேர் கொண்ட தனது ஆதரவாளர்களைத் திரட்டி ஷியாக்களின் உரிமைக்காகப் போராட ஆரம்பித்தார் அதைத் தொடர்ந்து 1975-ல் ஆரம்பமான உள்நாட்டுக் கலவரம் இன்று வரை முடியவில்லை

மக்கள் தொகைப் பெருக்கம் இன ரீதியான பெருக்கமாகப் பார்க்கப்படும்போது தொடர்புடைய நாடுகளின் ஆட்சியாளர்களுக்கு வாக்கின் மூலம் அல்லது ஆயுதத்தின் மூலம் பெரும சோதனை ஏற்படுகிறது

அன்றில்லை எனில் நாளை அதிகாரமாறல் என்பது தவிர்க்க முடியாதது என்கிற நிலைதான் தோன்றிக் கொண்டிருக்கிறது அப்படியும் ஆளும் இனத்தவர் நாட்களைத் தள்ளிப்போடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

துருக்கி நாட்டை எடுத்துக் கொண்டால் அங்கு வாழ்கிற குர்து இனத்தவர் எத்தனை பேர் என்பது தெரியாத ஒன்றாகவே இருந்து வருகிறது ஏனெனில், அவர்கள் எவ்வளவு பேர் என்பது வெளியாகிவிடக் கூடாது என்பதில் துருக்கி அரசாங்கம் எச்சரிக்கையுடன் செயல்பட்டு வருகிறது சமீபத்தில் மக்கள் தொகை வாக்கெடுப்பு நடத்தியபோது வாக்கெடுப்பு நடத்திய சிலர் பொதுமக்களிடம் நீங்கள் குர்து மொழி பேசுகிறீர்களா...? என்று கேட்டார்கள் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டார்கள்

வடஅயர்லாந்தில் 1981-ல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டபோது மக்களிடம் அவர்களது மதம் எது என்று கேட்கப்பட்டது. ஆனால் ஐந்தில் ஒரு பகுதியினர் தங்களது மதத்தைத் தெரிவிக்க மறுத்து விட்டனர். வட அயர்லாந்தில் கத்தோலிக்கர்கள் சிறுபான்மையினராக இருந்து பெருகி வருகின்றனர் 1971 ல் அவர்கள் 36-8 சதவீதமாக இருந்தனர் பத்து ஆண்டுகளில் 38 2 சதவீதமாக உயர்ந்து விட்டனர்

உலகின் சில பகுதிகளில் வாழ்கிற சிறுபான்மை இனத்தினரின் வளர்ச்சி அவர்கள் வாழ்கிற நாட்டின் மொத்த மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது குறைவாகவே இருக்கிறது. இப்படிப்பட்டவர்கள் தங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டாலும் ஆளுவோருக்குச் சவாலாக இருக்கிறார்கள்.

நன்றி. துக்ளக்


## பிரயாண ஒழுங்குகள்

### 1. Baharin:

(i) Muslim House Boys 2 (Speaking English
(ii) House Waiter 2 (Age 18 - 23 years
(iii) Muslim House Waiter - 2 (English Speaking with Experience)
iv) Gardeners/Farmers - 10
(v) House Cook - 2
(vi) Rock Breakers - (கிறேசரில் கல் உடைப்போர்)

சாப்பாட்டுக்கும் உணவுக்கும் தங்குமிடவசதியும் இலவசம்

### 2. Kuwait· National Cleaning Company:-

Hospital Cleaners - 100

### 3. Saudi Arabia:-

Cleaners
Drivers

### 4. Saudi Open Visa:

(i) Cleaners
(ii) Doctors - (M B.B S., F.R C.S) 25— 50 years
குடும்பத்துடன் தங்குமிடவசதி
(iii) Nurses - Female 30 - 40 years

மற்றும் சவூதி, குவைத், அபுதாபி சிங்கப்பூர் ஆகிய இடங்களில வீட்டுப் பணிப்பெண்ணாக (House Maid) பணிபுரிய விரும்புவோருக்கும் சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும் மேலதிக விபரங்கள் அறிய எம்முடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்.

## T. V. TRAVELS & TOURIST

STATION (FRONT)
BROWN ROAD KOKUVIL.
(சி 2317)


## 44வது விற்பனைநிலையம்

(பலாலி)

தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது 44வதுவிற்பனை கிளையை அண்மையில் இளவாலை மயிலங்கூடல் பகுதியில் திறந்துள்ளது சங்கத்தின் தலைவர் சி சி. மகாராசா இக்கிளை நிலையத்தை திறந்துவைத்தார்.

# அருட்புனல் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்

19ம் நூற்றாண்டில் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இந்தியாவின் கலை கலாசாரங்கள் அழிந்துபோகும் நிலையில் இருந்தன மேற்கத்தைய நாகரீக மோகத்தினால் கண்டுண்ட இந்தியர்கள் தங்கள் சுய நாகரீகத்தை வெறுக்கத் தொடங்கினார்கள் மேனாட்டுக் கல்வியின் மோகம் தங்களின் தத்துவ ஞானங்களைக் காட்டிலும் அவர்களின் பௌதீக ஞானமே பெரிதுஎன போற்றிப் புகழத்தூண்டியது. இதனால் மிகப்பாரிய அளவில் பாதிப்புற்றது இந்து மதமே எனலாம் ஏனெனில் மற்றைய மதங்களுக்குரிய கட்டுப்பாடு இந்துமதத்தில் இருக்கவில்லை, பரந்த நோக்கும் சுதந்திரமும் கொண்ட மதமாக இந்துமதம் விளங்கியதனால் எந்த ஒரு இந்துமதத்தினனும் தன் இஷ்டப்படி எதையும் செய்யவும் பேசவும் வாய்ப்பு இருந்தது இதனால் இந்தியாவின் மேற்கத்தையநாகரீகத்தின்வளர்ச்சி இந்துமதத்தில் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்துமதம் அழிந்துவிடுமோ என்ற நிலையில இருந்த பொழுது மிகவும் பழமையான இந்துமதத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அதனது உயர்ந்த கோட்பாடுகள் எல்லாமனித குலத்துக்குமே ஏற்புடையது என்பதை விளக்கி வெவ்வேறுமதங்கள் இறைவனையடையும் வெவ்வேறு பாதைகளே என்பதை வாழ்ந்துகாட்டி சமய சமரசத்துக்கு வித்திட்டு, ஒற்றுமையையும் சமாதானத்தையும் மனிதகுலத்துக்குள் ஏற்படுத்தி, மக்களை அழிவுப் பாதையிலிருந்து காப்பாற்றினார் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர்.

இததனைக்கும் ராமகிருஷ்ணர் படித்துப் பட்டம் பெற்றவர் அல்லர் ஏழை அந்தணர் குலதததில் பிறந்த படிப்பு வாசனையற்ற பூசாரியே அவர் இப்பேர்ப்பட்ட ஒருவரால் எப்படி இப் பெரிய காரியத்தைச் செய்ய முடிந்தது என்று நினைக்கும்பொழுது அங்குதான் அவரின் அவதாரத்தின மகிமை புலப்படுகின்றது. கடுமையான ஆத்மீக சாதனைகளில் ஈடுபட்டு அவற்றின் மூலம் கடவுளையடைந்து அதன் மூலம் பெற்ற ஆத்மீக பலத்தினால் மக்களைத் தடுத்தாட்கொண்டார் என்பது நோக்குதற்குரியது.

இவருக்குத்தான் அவதாரம் என்பது தெரிந்திருந்தபோதிலும் ஏன் பக்தி சாதனையில் ஈடுபட்டார் என்றால பக்தி சாதனை மூலமும் இறைவனை அடையலாம் என்பதை விளக்கவும் வெவ்வேறு மதங்கள் கடவுளை அடையும் வெவ்வேறு பாதைகள் என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிக்கவுமே, ஆத்மீக சாதனைகள் மூலம் கடவுளைக்கண்டதுடன் பட்டுமல்லாது மற்றவர்களுக்கும் கடவுளைக் காட்டக்கூடிய வல்லமை பெற்றிருந்த பரமஹம்சர் தன் அவதாரத்தின் நோக்கத்தை சுவாமி விவேகானந்தர்மூலம் நிறைவேற்றியதைக் காணக்கூடியதாயுள்ளது. மேற்கத்தைய நாகரிகத்தின் உறைவிடமாகிய அமெரிக்காவுக்குள்புகுந்து வீரமுழக்கமிட்டார் சுவாமி விவேகானந்தர். இந்துமதத்தின் சீரிய சிந்தனைகளை அதன உயர்ந்த நோக்கங்களைப்பாரெங்கும் பரப்பினர்.

ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரின் 50 வருட வாழ்க்கையின் ஒருபகுதி ஆத்மஞானம் பெறுவதிலும் மறுபகுதி தாம் தேடிய ஞானத்தை பிறர்க்குப் பங்கிடுவதிலுமே செலவழிக்கப்பட்டன. இவர் சாதாரண ஜீவன் முக்தர் அல்லர். பரமஹம்சராய் இருந்ததனால் மக்களைக் கடைத்தேற்றுவதே அவரின் பிரதான நோக்கமாய் இருந்தது தமதுசொந்த ஆத்மீக அனுபவங்கள் வாயிலாக ஆத்மீகசரித்திரத்தில் ஒருபுது அத்தியாயத்தை தோற்றுவித்தார். வெவ்வேறு மதங்களும் அவற்றின் அனுட்டானங்களும்

[7-ம் பக்கம் பார்க்க]

இரா. மகேந்திரசிங்கம்

# இன்றைய பலன்

மாதம்:- மாசி
திகதி:- 7 [1988 02-19]
கிழமை:- வெள்ளி
திதி:- துதியை
நக்ஷத்திரம்: பூரட்டாதி

மேடம்:- குடும் மேன்பாடு குறிக்கோள் வெற்றியுண்டு நீண்ட நாள் கனவு நனவாகும் உங்கள் உதவிக்கு உறவினர் முன்வருவர்

இடபம்:- சிறிய விடயத்தை முறியடிப்பதற்கும் அதிக பணத்தை செலவிடுவீர் உடன்பிறப்புகளுடன் நேரும் ஆசாரக் குறைவும் உண்டு.

மிதுனம்:- உத்தியோக உயர்வுமேற்படலாம் பெரியோர் ஆசியுமுண்டு சிலருக்கு வாகனவிபத்தும் உண்டு

கடகம்:- குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும். கைத்தொழில் விருத்தியுமுண்டு. புத்திரர் மூலம் புகழுக்கு இடமுண்டு.

சிங்கம்:- அவசரப் போக்கினால் அடிசறுக்க நேரிடும் துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர், கணவன் மனைவி உறவு காரசாரமாக இருக்கும்

கன்னி:- மனைச் சிறப்புக்கும் மங்களகரமான நிகழ்ச்சிக்கும் இடமுண்டு. தொழில் துறையிலும் நயமுண்டு.

துலாம்:- பொருள் விரயத்திற்கு இடமுண்டு. கடமையாற்றும் இடத்தில் சண்டை தடைப்பு வேலைகள் நடைபெறும் பொறுமை அவசியம்.

விருச்சிகம்:- பிறவழிச் செய்திக்கும் இடமுண்டு. தொழில் சமவிருத்தியுமுண்டு இடமாற்றம் ஏற்படலாம்.

தனுசு:- தொழில் துறையில் தொடர்புகள பெருகும். பிரமுகர்களும் உங்களைத் தேடி வருவர் மனையிலும் சிறப்பு உண்டு

மகரம்:- வாகன சுகத்துடன் வரவிலும் திருப்தியுண்டு. தானிய விருத்தியுடன் சன்மானமும் தழைத்தோங்கும்.

கும்பம்:- தடுமாற்றம தணியும். எவ்விடயத்திலும் விழிப்புடன் இருக்கவும் மறைமுக எதிர்ப்புமுண்டு

மீனம்:- தேகநிலையில் மந்தம் ஏற்படும். சிறு பிணிக்கும் இடமுண்டு. உடல்நலததைப் பேணவும்

திருமலை
வே. ரவீந்திரன்

## ஐ. நா. அமைதிப்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

பெய்ரூனில் கடத்தப்பட்ட இரண்டாவது அமெரிக்க ஐ நா படை அதிகாரி கேர்ணல் ஹிக்கின்ஸ் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)


THIRD DEATH ANNIVERSARY of Late Mr C H DURAISAMY



Born: 18-1-1913
Died: 21-2-1985

Too Precious To lose
It was Gods will
We could not Choose
Only our Love &
Prayers to You.

Fondly rembered by
Your Ever loving
Wife Children,
Son in law Daughter-in laws and Grand-Children

A requim mass will be held at St Marys Cathedral Jaffna on Saturday the 20th of February 1988 at 6-15 a m.

ALL ARE CORDIALLY INVITED
(C-2377)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
சிவக்கொழுந்து
துரையப்பா
மலர்வு: (19 03-1914)
உதிர்வு (20-02-1987)
திதி: 18 02-1988

அன்புத் தெய்வமே உங்களைப் பிரிந்த ஓர் ஆண்டு ஆனாலும் என்றும் உங்கள் வார்த்தைகள், பாசம் எல்லாம் எங்கள் மனதை விட்டு அகலவில்லை. என்றும் உங்கள் நினைவாக இருந்து உங்களையே நினைத்து வாழ்கிறோம்.

அன்புக் கணவர்
பிள்ளைகள், பேரன்
பூட்டப்பிள்ளைமார்
கொக்குவில் மேற்கு
கொக்குவில்.

சி2 801


## அருட்புனல்

[6ம் பக்கத் தொடர்ச்சி]

முடிவான உண்மையை அறியும் வெவ்வேறு பாதைகளே என்பதனை அனுபவவாயிலாக கண்டறிந்திருந்தார்.

கோட்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஆசாரங்கள் சம்பிரதாயங்கள், கோவில் முதலியவற்றைப் பற்றிக் கவனிக்கவேண்டாம். ஒவ்வொரு மனிதனுள்ளும் உள்ள சாரமான சத்துப்பொருளான தெய்வத்தன்மையோடு ஒப்பிட்டுப்பார்க்கையில் இவை ஒன்றுமில்லாது போய் விடுகின்றன. எவ்வளவுக்கெவ்வளவு இத்தெய்வத்தன்மை ஒருவனிடத்தில் அதிகமாகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மை செய்யும் சக்தியும் அவனிடம் பெருகும். முதலில் இதைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். ஒருவரையும் குறை கூறவேண்டாம். ஏனெனில் எல்லாக் கொள்கைகளும், சம்பிரதாயங்களும் தம்முள் ஏதோ சிறிது நன்மையும் வைத்துக் கொண்டுள்ளன. மதமென்பது வெறும் வாத்தையன்று பெயரும் சம்பிரதாயங்களுமல்ல. ஆனால் அது ஆன்ம அனுபவமே என்பதை உங்கள் வாழ்க்கையில் நிதர்சனமாகக்காட்டுங்கள். சமய வொழுக்கையைக் கைகொண்டு நீயே மெய்ப் பொருளை நேரில் காண்பாயாக என்பதே நவீன உலகுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கொண்டு வந்த செய்தியென்று சுவாமி சுவாமி விவேகானந்தர் விளம்பினர்.

## குளிர்த்தி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை வீயோடை முத்துமாரி அம்மன் கோவில் குளிர்த்தி உற்சவம் இன்று நடைபெறுகிறது காலையில் அபிஷேக ஆராதனையும் பிற்பகல் கஞ்சி வார்த்தலும் நடைபெறும்.

## தஞ்சை நடராஜன்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ஆலயத்துக்கே சொந்தமானது என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த உலோகச் சிலை 12ம நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.


THE EXPRESS INSTITUTE KOPAY

தாவரவியல்
சனி, ஞாயிறு வகுப்புக்கள்
By
திரு. பாலா

12-00 - நுண் அங்கி உலகம்
1-00 - P. M. PHYSIOLOGY
4-30 - P. M. GENETICS

[எ 2597]



# BECON

ஸ்ரீதர் சினிமா முன்பாக
யாழ்ப்பாணம்

## A/L 89
## கலை வர்த்தகம்

புதிய பிரிவு
வார இறுதி வகுப்புக்கள்

| | | |
|---|---|---|
| கணக்கியல் | மரியதாஸ் | 9.00 |
| வர்த்தகம் | ரட்ணம் | 10.00 |
| பொருளியல் | வரதராஜன் | 11.00 |
| இந்து நாகரிகம் | அருளதங்கை | 12.00 |
| அளவையியல் | S. S. மனோகரன் | 1.00 |

ஆரம்பம்: 22-2-88
ஞாயிறு 9-00 A. M.

(சி 302)



A/L மாணவர்களுக்கு

89 - அசேதன இரசாயனம்.
ஆரம்பம்: (20-02-88)
Sat. & Sun - 1-30—2-30.

88 - பௌதிக இரசாயனம்.
ஆரம்பம்: (27-02-88)
பிரிவு I - Sat. & Sun - 6-30—7-30.
பிரிவு II - Sat. & Sun - 12-15—1-15.
ஆசிரியர்: திரு. நாகரட்னம் B.Sc.

88 - புலங்கள்.
ஆரம்பம்: (22-02-88)
Mon. - Wed. - 6-30 a m.
ஆசிரியர்: திரு. ரவீந்திரநாதன் B Sc.
30 குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

★ ★ ★

89 - அசேதன இரசாயனம்
ஆரம்பம்: (20-02-88)
Sat. & Sun. - 4-00—5-00 p.m.
ஆசிரியர்: திரு. நாகரட்னம் B.Sc.
மணல்தரை லேன், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

ஏ-311


## இப்படியும் நடக்கிறது

யாழ். உதவி அரசாங்க அதிபரும் இலக்கியவாதியுமான திரு பி. பாலசிங்கம், உத்தியோகபூர்வ ரீதியில் வடமராட்சிக்கு சென்றபோது எதிர்பாராத வகையில் மிதிவெடியில் சிக்கி ஒரு காலை இழந்த பரிதாபம் நீங்கள் தெரிந்ததே.

அவரைப்பார்க்க நான் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு சென்றபோது இருகண்களிலிருந்தும் நீர்வடிய, அந்த முகம் மட்டும் மௌனராகம் பாடியது. அந்த நேரத்தில் துயரத்தை அடக்கிடவே முடியவில்லை.

ஆனால் அன்று அவர் ஒரு கட்டத்தில் கூறியது மட்டும் இப்பொழுதும் காதில் ஒலிக்கிறது.

'இறைவன் எனக்கு நல்ல சுகத்தைக்கொடுக்க வேண்டும் மீண்டும் நான் பணியாற்றவேண்டும்...... எனது மக்களுக்கு முடிந்ததைச் செய்யவேண்டும்......'

எதிர்பாராதவிதமாக நேற்று அவரைக்கண்டேன். ஒரு 'லேடீஸ்' சைக்கிளில் மிகவும் மகிழ்ச்சியுடன் தன்னந்தனியாக ஹாய்'யாக போய்க்கொண்டிருந்தார். பார்க்க எவ்வளவோ மகிழ்ச்சியாக இருந்தது!

ஒரு மனிதனுக்கு மிகவும் தேவையானது தன்னம்பிக்கை. இதனைத்தான், காலஞ்சென்ற 'கல்கண்டு' ஆசிரியர் திரு தமிழ்வாணனும் அடிக்கடி 'துணிவே துணை' என்று வலியுறுத்துவார்.

அன்று... ஒரு காலை இழந்த நிலையிலும் திரு பாலசிங்கத்தின் அடிமனதில் நிழலாடிய மன உறுதி-தன்னம்பிக்கை - துணிவே துணைதான் இன்று அவர் நடமாட வழிகாட்டியதுபோலும்!

ஊடுருவி

## "பிரதமரின் பெயருக்கு களங்கம்"
# ஜெயலலிதா மீது நாஞ்சிலார் கண்டனம்

(சென்னை)

பிரதமர் ராஜீவின் பெயரை கவுரவமற்ற முறையில் செல்வி ஜெயலலிதா பயன்படுத்துவதாக தி மு கவின் துணைப் பொதுச்செயலாளர் திரு நாஞ்சில் மனோகரன் பிரதமருக்கு முறையிட்டுள்ளார்.

இது தொடர்பாக திரு மனோகரன் பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில், செல்வி ஜெயலலிதா, தமிழக ஆளுநர், சபாநாயகர் மற்றும் இந்திய நிர்வாக பொதுசேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராக அறிக்கைகளை விடுவதாகவும், ஆளுநர் பதவியிலிருந்து அகற்றப்படு

[8ம் பக்கம் பார்க்க]


## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்
சி. க. சண்முகம்
(முன்னாள் இரத்தினபுரி அ... ஸ்ரோர் உரிமையாளர்)
மலர்வு: 27-03-1914
உதிர்வு: 23 01-1988

23-01-1988 (அன்று) இறைவனடி எய்திய தாங்கள் எமது உள்ளங்களில் என்றும் பாசமுள்ள அருமைக் கணவராகவும், தந்தையாகவும், மாமனாராகவும், பாட்டனாராகவும் என்றென்றும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளீர்கள். உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம். வீட்டுக்கிருத்தியம் 21 02 1988 ஞாயிறு அன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
10-ம் வட்டாரம்,
புங்குடுதீவு (சி 2373


## இல்லக விளக்காய் திகழ்ந்தவர்

அண்மையில் அமரரான புங்குடுதீவு திருமதி செல்லத்துரை மகேஸ்வரநாயகி தலைமை ஆசிரியரும் கிராம சேவையாளர் பதவி வகித்தவருமான ... கணவருக்கு பேணல் உணர்வால் பெருமை சேர்த்தவர்.

சமயப், கல்வி சமூக சேவைப் பாரம்பரியத்திலுள் இவரும் இணைந்து ... கலந்ததால் ஒரு பாரம்பரியத்தின் மரபுகளும் அதன் மதிப்பும் இன்றும் கணிப்புக்குள்ளாகியிருப்பது கணிப்புக்குரிய அம்சமாகும். சைவ ஆசாரங்களில் உறைப்பான பிடிப்பு அனுஷ்டானங்களின் உண்மைகளை தெளிந்து ... எந்த நேரமும் ... இணைந்த அன்பத்தில் திளைக்க வைத்தது ...

... கணபதிப்பிள்ளை, செல்லத்துரை என்னும் மூன்று பெரியார்களின் கல்வி ... சமூகப் பணி குறித்த பெருமைகளை ... அம்மையார் மறைந்திருந்து ஆற்றிய மகத்துவங்கள் புண்ணியங்களாய பொசிந்தவையாகும். தமிழ்மாமணி க சிவராமலிங்கத்தையும், புலவர் க. சிவானந்தனையும் சைவத் தமிழுலகுக்கு ஆற்றுப்படுத்திய பெருமை இந்த அம்மையாருக்குரியது.

குறைகளைக் குறித்துக் ... நிறைகளை நினைந்து திக்காமலும் தமிழ்ப் பெண்மைக்கு அணிகலனாய் விளங்கிய அம்மையார் அவர்களின் ஆன்மா சாயுச்சியப் பேறு பெறும் என ... உயிர் பிரிந்த புண்ணிய தினத்தின் பொருத்தங்கள் சாட்சியாகின்றன.

செ. சிவஞானம்,
(இளைப்பாறிய அரசாங்க அதிபர்).

### மணிவாக்கு

பரிபூரணமான நேசம் பயத்தை புறம்பாக்கிவிடுகிறது பயம வேதனையுள்ளதாகையால் பயபபடுகிறவன் நேசத்துக்குப் பூரணயானவனல்ல.

—பைபிள்

## நமது நோக்கு

# சிவராத்திரி கண்ட சாதனை

சிவராத்திரியில் விழிப்பிருப்பதைக்காட்டிலும் ஆவி துறக்கும் ஆன்மா நற்கதியடையுமென்ற நம்பிக்கை மிகப்பழமையானது.

பம்பலபிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் குண்டுவெடிப்பால் அகால மரணமடைந்த பன்னிரண்டு பக்தர்கள்பற்றி ஆறுதலடைவதற்கு நம்பிக்கை பொருத்தமானதா? போதுமானதா? அரனடி உடனடியாக அடையலாமென்ற நம்பிக்கையில் குண்டுக்குப் பலியான பக்தர்கள் கோவிலுக்குப் போயிருப்பார்களா?

பரபரப்புடன் பேசவேண்டிக் கப்படாதென்பது எமது உறுதியான கொள்கை. இருப்பினும் இந்த அக்கிரமம் இவ்விதகிண்டலுக்கு இடமளிப்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள். இனக்கலவரம், மதக்கலவரம், மொழிக்கலவரம் - இறெற்றைக்கடந்த ஆட்சிச் சலரைம் பல நுட்பமான சூழ்ச்சிகளுக்கு வழிவகுக்கின்றது வடக்கில் கடும் போர் நிகழ்ந்த காலத்தில் கோவில்களே பாதுகாப்பான இடமென்று மக்கள் அங்கு குவிந்தனர். அதில் நியாயமிருந்தது

அவ்வாறு தலைநகர் கோவில்கள் பாதுகாப்பாகவிருக்குமென்று நினைப்பது தவறென்பது இச்சம்பவத்தால் வெளிப்படுகின்றது. இதனை பக்தர்கள் எதிர்பார்க்கவில்லை ஆனால் அதுவே குண்டுசுளிசூத்திரதாரிகளுக்குகாரணமாகவிருந்தது

இத்தகைய அட்டூழியம் இன்று நன்றாய்க் கலங்கி நாற்றமெடுக்கும் அரசியல் குளத்தில் செழித்துவளரும் பயிர் என்றே கொள்ள வேண்டும்.

நாடு முழுவதிலும் நடைபெறும் வன்முறைச் சம்பவங்கள் விதம்விதமானவை. அவற்றிற்கு 'கொடுமை' என்ற பொதுவான குறி சுடப்பட்டாலும், அவற்றின் காரணங்களை ஊகிக்க முடியுமானால் பொதுமக்கள் தப்பிக்கொள்ளலாம.

அரசியற் போட்டியில் எழுந்த அக்கிரமங்களுக்கு இலக்கணம் வகுப்பது கடினம்.

'யார் யாரைக் கொல்கின்றனர்' என்பது தெரியவில்லையே? என்பது லெபனானில் சர்வசாதாரணமான வியப்புவினை; இன்று அங்கு இது அர்த்தமற்றதாக்கிவிட்டது.

பௌத்த பண்பாட்டுக்கு பேர்போன சிறிலங்காவில் இந்த வினைவை பிரபலபத்திரிகைகளே எழுப்புகின்றன பகைவர் யார் என்பது வெளிப்படாத நிலை; இன்றைய நவீன ஆயுதங்கள் இதற்கு உதவுகின்றன. நெருப்பில் சிறியதென்றும் பெரியதென்றும் இல்லை:

உலோகத்தினுல் செய்யப்பட்ட கொடிய ஆயுதத்தையும் தடுக்கவல்ல உபாயமே இன்றைய ஆட்சியாளருக்குத் தேவை; அவ்வித உபாயம் மக்களைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்கவல்லது.

அவ்வித செல்வாக்குக் குன்றிய ஆட்சியில் மக்கள நடமாட்டம் மோசத்தில் முடியலாம்.

'இன்று யாழ்ப்பாண நகரைப்போல் பாதுகாப்பான இடம் தமிழருக்கு வேறெதுவும் இல்லை' என்கிறர் ஒரு நண்பர். 'இன்று' என்பதை வற்புறுத்துவதில் நியாயம இருந்தது. யாழ்ப்பாணத் தமிழர்பலர் உயிரைப் பாதுகாப்பதற்கு கொழும்பு சென்றிருந்தனர். அந்தநிலை மாறியதும வீடுதிரும்பின வருள் ஒருவர் அவர்

அன்று கொழும்பைப் போல் பத்திரமான இடம் இல்லை என்று அங்கு போனவர்கள் இன்றைய சம்பவத்தால் திகிலடைந்து, சங்கீதக் கதிரைகள்போல் இடம் மாறுவது மடமை

ராஜநீதி தளம்பமடைந்து மக்கள் தக்குத்திசை தெரியாது அவலப்படுவதை நன்ருக உணர்வது அவசியம். இந்தநிலையில் செக்கென்ன சிவலிங்கமென்ன என்ற மனோபாவம் கொண்ட மானிட மிருகங்கள் கட்டவிழ்க்கப்பட்ட நிலையில் பம்பலப்பிட்டி விநாயகர் [illegible] தலைதாமாளிகவவோ எந்த சலுகையையும் பெறமுடியாது.

கண்டியிலுள்ள [illegible] கோவிலில் எத்தகைய பாதுகாப்பு இருந்தது. இருப்பினும குண்டும் பிரசன்னமானதை நாம் மறந்துவிடவில்லை

நாடனைத்திலும் ஒரு சாதாரண நிலை தோன்றும்வரை பொதுமக்கள் - இன மத, மொழி வேறுபாடின்றி ஒருவருக்கொருவர் உதவுபவரோடு மிகுந்த அவதானத்துடன் நடமாடவேண்டியது உசிதம்.

## தாய்லாந்து, லாவோஸ் போர்நிறுத்தம்!

பாங்கொக், பெப் 18, தாய்லாந்து, லாவோஸ் எல்லையில் போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது

இந்த இரு நாடுகளினதும் தளபதிகள் பாங்கொங்கில் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் நேற்று கைச்சாத்திட்டனர்-

கடந்த 3 மாத காலமாக இந்த இருநாடுகளினதும் எல்லைப்பகுதயிலிருந்த 75 சதுர கி. மீட்டர் தூர பிரதேசம் தொடர்பாக மோதல் இடம் பெற்று வந்தது. நூற்றுக் கணக்கில் இருதரப்பிலும் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்தே நேற்று போா நிறுததம் கொண்டு வரப்பட்டது 48 மணிநேரத்தில் சர்ச்சைக்குரிய பகுதியிலிருந்து துருப்புக்கள் வாபஸ்பெறபபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் 15 தினங்களில் பிரஸ்தாப எல்லைத்தகராறு குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (கி)

### தவக்கால நற்சிந்தனை

## உண்மை நோன்பு

நடிக்கக் கற்றுக் கொண்ட மனிதன் வாழ்வையே நடிப்பாக்கிக் கொள்கிறன். இறைவாக்கினர் இசையாஸ் வடித்துரைத்த வார்த்தைகள் நோன்பு இருக்கும் ஒவ்வொரு உள்ளத்தையும் சோதனை போடுகிறது 'நீங்கள் உணு நோன்பு இருக்கும் நாளிலும் உங்கள் விருப்பத்தைத் தேடுகிறீர்கள்' தலைகுனிவதும், கோணி அணிவதும், சாம்பல் பூசுவதும் நோன்பாகாது. அயலவர் துயர் துடைப்பது தான் உண்மை நோன்பு என்கிறர். அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்து, அயலவனை அணைத்து உணவூட்டி, உரிமை அளித்து ஆதரவு செய் என்றுர்,

வீணே எமமை வருத்தி நெஞ்சைக் கல்லாக்குவதில் பயன் ஏது? எமது உள்ளத்தின் ஆழத்தில் இறைபன்பு ஊற்றெடுத்து பிறர் அன்பாக, பிறர் சேவையாக, பகிர்ந்தளிப்பாக, சகோதர வாழ்வாக வடிந்தோட வேண்டும். நோன்பு என்பது எனக்கு 'இல்லை' என்பது மட்டுமல்ல; பிறர்க்கு என்னை 'ஆம்' என அர்ப்பணிப்பதே யாகும். இதுவே இயேசுவின் நோன்பும்.

- சுவாமி ஜீவா போல்.

### ஜெயலலிதா

7-ம் பக்கத் தொடர்ச்சி]

வாரென்றும் சபாநாயகர் பாண்டியன் சிறையில் தள்ளப்படுவாரென்றும் கூறியதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முதல்வர் தாமேஎன்றரீதியிலேயே அவர் நடந்து கொள்வதாகவும் தமது நடவடிக்கைகளுக்கு இந்நாட்டின் மிக உயர்ந்த அந்தஸ்துள்ள அலுவலகத்தின் ஒத்தாசை உள்ளதாகத் தெரிவித்து வருவதாகவும் இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

### மினிபஸ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விசாரணையை மேற்கொண்டபதில் நீதிபதி க.கேசவன் டாக்டர் ஈஸ்வராஜிடம் பிரேத பரிசோதனையைநடத்துமாறு உத்தரவிட்டார்.

மினிபஸ் சாரதி சிவநாயகம் சிவலிங்கம் என்பவரை திங்கட்கிழமை யாழ். பொலிசில் ஆஜராகுமாறு கட்டளையிட்டு, தீர்ப்பை ஒத்திவைத்துள்ளார். [கு]

### நெடுந்தீவு

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கப்பட்டுள்ளார்.

வடபிராந்திய தொற்று நோய்களுக்கான வைத்திய நிபுணர் விஜயராசாவும் அங்கு உடன் வைத்திய நடவடிக்கைகளைக் கவனிக்கவுள்ளார்.

இப்பணிக்காக நெடுதீவுக்கு தற்காலிகமாக மூன்று சுகாதாரப் பரிசோதகர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை நாற்பதிற்கும் மேற்பட்டோர் இந்நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர் எனவும் இது பரவாது தடுக்குமுகமாக நெடுந்தீவிலிருந்து எவரும் அவசிய தேவைகளன்றி வேறுஇடங்களுக்குச் செல்லாதவாறு தடைசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

### லொறி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிரட்டி இறம்பைக்குளம் பகுதியிலுள்ள காட்டுக்கு கடத்திச் சென்றதாகவும், லொறியிலிருந்த மைசூர் பருப்பு, தேங்காய்எண்ணை, பாசமா வகைகள் உட்பட பல பொருட்களை அபகரித்துக் கொண்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இக் கொள்ளைச் சம்பவம் குறித்து மாங்குளம் பொலிஸ் நிலையத்திலும், இந்திய அமைதிகாக்கும் படையின் முகாமிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### சவூதியிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குண்டு வெடிப்புச்சம்பவத்தின் போது பலியானவராவார்

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

சவூதியிலிருந்து விடுமுறையில் கொழும்பு திரும்பிய அற்புதநாதன் யாழ்ப்பாணம் திரும்புமுன் பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் கோவிலுக்கு சிவராத்திரி தரிசனத்திற்காகச் சென்றபோதே குண்டுவெடிப்புச் சம்பவத்தில் சிக்கிக்கொண்டாராம்.

திருமணமான அற்புதநாதனுக்கு குழந்தைகளுமுண்டு அவரதுசடலம் உரும்பராய்க்கு கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

#### அடையாளங்கண்ட சடலங்கள்

இக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது பலியானோர்களில் நாரஹன்பிட்டி சித்திரா ஒழுங்கையைச் சேர்ந்த சிவன்பிள்ளை இராசேந்திரன் (வயது 26) கொள்ளுப்பிட்டி 5 வது ஒழுங்கையைச் சேர்ந்த ரவி தங்கவேலு (வயது 16) வீரய்யா, பொன்னம்பலம் ஆகியோரின் சடலங்கள்அடையாளம் காணப்பட்டுள்ளன.

#### காயமடைந்தோர் சிலர் விபரம்

கே. பகலசாமி (வயது 46) பிரதீப் ஆனந்தன் (12 வயது) கமலஹாசன் [14வயது] நிரஞ்சன் [8 வயது) ரவிச்சந்திரன (37 வயது) செல்வேந்திரன் (37 வயது) கிருஷ்ணசாமி கே மாரியம்மா, சந்திரசேகரன், இராமதாஸ், இராஜகிருஷ்ணன், தீபகுமார் ஆகியோர் காயமடைந்து கொழும்புபெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## கோவிலைச் சுற்றி பலத்த காவல்

(கொழும்பு]

பம்பலப்பிட்டி மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவத்தையடுத்து கோவில் தற்போது பூட்டப்பட்டு பலத்த பொலிஸ் காவலுக்குட்படுத்தப்பட்டுள்ளது

சிவராத்திரி தினம் சுமார் 7-50 மணியளவில் கோவில் மண்டபத்தில் நூற்றுக்கணக்கான பத்தர்கள் கூடியிருந்த வேளையில் இனந்தெரியாத நபர்களினுல் அடுத்தடுத்து இரண்டு 'கிரனேட்டுகள்' விசப்பட்டதாக அங்கிருந்தவர்கள் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளனர்.

(சி)

### யாழ்- செயலகம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளான உணவுத்திணைக்களம், பென்சன்கிளை சம்பளம் வழங்கல் பிரிவு ஆகியவைகள் இங்கு செயல்பட்டன. ஏனையபிரிவுகள் செயற்படவில்லை.

### விடுதலை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துடன் தொடர்புடையவர்களென்றும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு வடக்கு - கிழக்கிற்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவர்களெனும் காரணம்காட்டி அனேக இளைஞர்கள், யுவதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் அனைவரதுவிடுதலைக்கும் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

(சி)

## மரண அறிவித்தல்

### திரு. கணபதிப்பிள்ளை தம்பிராசா

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும், முன்னைநாள் கிளிநொச்சி மிருக வைத்திய உதவியாளருமாகிய, திரு. கணபதிப்பிள்ளை தம்பிராசா அவர்கள் 9-12-87-ல் சவுதி அரேபியாவில் அகாலமரணமானுர். அன்னர் மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற கணபதிப் பிள்ளை, செல்லாச்சி தம்பதிகளின் மகனும், அன்பிற்கரசியின் அன்புக் கணவரும், சாந்தினி (விஞ்ஞான பீடம்), சுபாஜினி (கலைப்பீடம், யாழ். பல்கலைக் கழகம்), சபேசன், பிரகாசன் (மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,பொன்னுத்துரை,திருமதி செல்வரெத்தினம் ஆகியோரின் சகோதரரும், சட்டத்தரணி செ. புண்ணியமூர்த்தி அவர்களின் சகலனும் ஆவார். இன்று (19-2-88) கொழும்பிற்கு கொணடு வரப்படவிருக்கும் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக பொறளை 'கலனிப்புர' மண்டபத்தில் வைக்கப்பட்டு இன்று மாலை 4 00 மணியளவில் கொழும்பு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்குமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்: செ புண்ணியமூர்த்தி.
அளவெட்டி வடக்கு. [சட்டத்தரணி]

[சி-2385]

### அப்பாத்துரை அற்புதநாதன்

உரும்பராயைச் சேர்ந்த அப்பாத்துரை அற்புதநாதன் கொழும்பில் அகாலமரணமானுர். இவர் காலஞ்சென்ற அப்பாத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், அற்புதராணியின் அன்புக் கணவரும், அஜந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி யின் அன்புத் தந்தையும், இராசரத்தினம் [பொறியியலாளர்-அவுஸ்திரேலியா], மகேசரத்தினம் [லண்டன்], தெய்வேந்திரம் (கொக்குவில்), அருந்தவநாதன் [இ.போ.ச. கோண்டாவில்], சத்தியநாதன் [பொறியியலாளர்-கனடா], திரவியம் [லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. முருகானந்தன் (லண்டன்), இந்திரா [அவுஸ்ரேலியா], பேள், சாந்தா, சரோ [கனடா], மணி, மகேசன் [யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னரின் பூதவுடல் 20-ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு 36, காசில் ஒழுங்கை, பம்பலப்பிட்டி இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

[சி-2398] தகவல்: சி. மகேசன்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1988-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81. Eelanadu P.O Box, No:49. Telegram, Eelanadu, Telephone: 22389, 24126.